சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

<u>OS 157/2020</u>

12.08.2025.

**<u>வா.சா.1 பத்மாவதி க /பெ. சந்தானம் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

வழக்கை நான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு நிலுவையில் இருக்கும்போதே என் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அசல் வழக்கு 221/2016 வழக்கானது சொத்து பிரச்சனைக்காக என் தம்பி தாக்கல் செய்தார். இந்த வழக்கு சொத்துகள் என் அம்மா அலமேலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். என் தாயாருக்கு 3 ஆண்கள் 1 பெண் வாரிசுகள் ஆவோம். என் தந்தை இறந்து எத்தனை ஆண்டுகள் ஆகும் என்றால் சுமார் 20 ஆண்டுகள் இருக்கும். வழக்கு சொத்துகள் அனைத்தையும் 01.04.2013 ல் என் தாயார் ஒரு இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை துரைராஜ் பெயருக்கு எழுதிவைத்துள்ளார். அதன்பின்பு துரைராஜ் அவர் பெயருக்கு பட்டா மாற்றிக்கொண்டார் என்றால் அதுபற்றி தெரியாது. செட்டில்மெண்ட் எழுதப்பட்ட பின்பு எங்கள் தாயாரை நாங்கள் அழைத்து சென்றுவிட்டோம் என்றால் அதற்கு முன்பு அழைத்துசென்றுவிட்டோம். அதன்பின்பு நாங்கள் எங்கள் தாயாரை 05.05.2015 ல் நீடாமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டோம் என்றால் சரிதான். அதன்பின்பு என் தம்பி ஆவணத்தை ரத்து செய்தது செல்லாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதே என் தம்பியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தம்பியின் வாரிசுகள் தான் இந்த வழக்கை நடத்திவருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போதே என் தாயார் இறந்துவிட்டதால் மற்ற வாரிசுகளான நானும் மற்ற இருசகோதரர்களும் இந்த வழக்கை நடத்துகிறோம் என்றால் சரிதான். என் தாயார் என் தம்பி துரைராஜ் மீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தார் என்றும் அதனால் தான் செட்டில்மெண்ட் ஆவணத்தை துரைராஜ் பெயருக்கு எழுதிவைத்தார் என்றும் என்னுடைய தூண்டுதலின் பெயரில் என்னுடைய தாயார் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றாலும் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதாக இருந்தால் நீதிமன்றம் மூலம் முறையாக ரத்து செய்யவேண்டும் என்றாலும் என் தூண்டுதலின் பேரில் ஆவணத்தை ரத்து செய்ததால் அது செல்லாது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.